# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.6.5.D

எண்ணியல் - பாடச்சுருக்கம் - தநாஅபு பயிற்சி 1.5

## எண்ணியல் - பாடச்சுருக்கம் - தநாஅபு பயிற்சி 1.5

1. ஒரு தசம எண்ணை முழுமையாக்க , முதலில் முழுமையாக்கப்பட வேண்டிய இலக்கத்தை அடிக்கோடிட்டுக் குறிக்க வேண்டும்.

(a) சரி ✓ (b) தவறு

$41.4\underline{6}5 \simeq 41.47$

2. தசம இலக்கங்களின் வலதுபுறமாகப் பூச்சியங்களைச் சேர்க்க அந்த எண்ணின் மதிப்பு மாறாது.

(a) தவறு (b) சரி ✓

$8.100 = 8.1$

3. ஒரு தசம எண்ணை முழுமையாக்க , அதற்கு அடுத்த இலக்கம் 5 ஐ விடக் குறைவாக இருந்தால், குறித்த இலக்கம் மாறாது.

(a) சரி ✓ (b) தவறு

$6.4\underline{2}1 \simeq 6.42$

4. தசம இலக்கங்களைச் சமன் செய்ய அவற்றின் வலப்புறத்தின் இறுதியில் பூச்சியங்களைச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம்.

(a) தவறு (b) சரி ✓

42.14 + 32 + 23.7 ஐக் கூட்டுக.

| |
|---|
| 42.14 |
| 32.00 |
| 23.70 |
| 97.84 |

42.14 + 32 ஐக் கூட்டுக.

| |
|---|
| 42.14 |
| 32.00 |
| 74.14 |

5. ஒரு தசம எண்ணை முழுமையாக்க , அதற்கு அடுத்த இலக்கம் 5 ஆகவோ, அல்லது 5 ஐ விட அதிகமாகவோ இருந்தால், குறித்த இலக்கத்துடன் 1 ஐக் கூட்டவும்.

(a) சரி ✓ (b) தவறு

$73.\underline{1}8 \simeq 73.2$

6. இரு தசம எண்களைப் பெருக்கும்போது கிடைக்கும் பெருக்கற்பலனில் உள்ள தசம இலக்கமானது அவ்விரு தசம எண்களிலுள்ள தசம இலக்கங்களின் கூடுதலுக்குச் சமம்.

(a) தவறு (b) சரி ✓

| | |
|---|---|
| 6.5 | 1 தசம இடம் |
| × 8.4 3 | 2 தசம இடங்கள் |
| 1 9 5 | |
| 2 6 0 | |
| 5 2 0 | |
| 5 4.7 9 5 | 1 + 2 = 3 தசம இடங்கள் |

7. ஒரு தசம எண்ணை முழுமையாக்க , முழுமையாக்கிய பிறகு, குறித்த இலக்கத்திற்கு அடுத்து வரும் அனைத்து இலக்கங்களையும் நீக்குக.

(a) சரி ✓ (b) தவறு

$13.\underline{7}183 \simeq 13.7$

8. ஒரு தசம எண்ணை 10, 100 மற்றும் 1000 ஆல் பெருக்கும்போது தசமப் புள்ளியானது 1 இக்கு அடுத்துள்ள பூச்சியங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வலதுபுறமாக நகரும்.

(a) தவறு (b) சரி ✓

$14.132 \times 10 = 141.32$

$14.132 \times 100 = 1413.2$

$14.132 \times 1000 = 14132$

9. ஒரு தசம எண்ணை 10, 100 மற்றும் 1000 ஆல் வகுக்கும்போது கிடைக்கும் ஈவில் தசமப் புள்ளியானது 1 இக்கு அடுத்துள்ள பூச்சியத்தின் எண்ணிக்கைக்கு ஏற்ப இடதுபுறமாக நகரும்.

(a) சரி ✓ (b) தவறு

$31.7 \div 10 = 3.17$

$31.7 \div 100 = 0.317$

$31.7 \div 1000 = 0.0317$

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/mwdG3Ub7R6w


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 31st October, 2022 :: 06:41 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.